உ

கடவுள் துணை.

# வல்லாளமகாராஜன்

# சரித்திரக்கும்மி.

முதற்பாகம்



இவை - சிறுமணவூர்

முனுசாமிமுதலியாராலியற்றப்பட்டு,

ஆ-இரத்தினவேலுமுதலியாரது

வாணீவிலாஸ அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1898

சென்னை நாராயணமுதலிவீதி 52-வது நெ வீடு.

கடவுள் துணை.

# திருவண்ணாமலை
# வல்லாளமகாராஜன் சரித்திரக்கும்மி.

அவையடக்கம் - வெண்பா.

ஜெலம்வளர்த்தஅண்ணா மலைவளர்க்கதருமநெறி
நலம்வளர்த்தவல்லாளன் நற்புகழை-நிலம்வளர்க்க
திருமணவூர்முனிசாமி செந்தமிழாற்பாடுதற்குக்
கரிமுகவனபொன்னடியே காப்பு.

நூன்முகம்-கும்மிப்பாட்டு.

கும்மியடிப்பெண்கள் கும்மியடி-குரு
கும்பமுனி தமிழாலே
செம்மலெனுந்திரு வல்லாளமன்னவன்
சேதியைச்சொல்லிப் புவிமேலே ௧

முந்தியுதித்தவனைப்போற்றி-முரு
கேசனும்வேலு மயில்போற்றி
செந்தமிழ்வாணி சிதம்போற்றி-சிவ
காமிக்கருணைப் பதம்போற்றி ௨

ஆதியண்ணாமலை யெண்பதிங்காதமும்
அன்னையுந்தந்தையும் போல்வளர்த்த
நீதிவழுவாத வல்லாளமன்னவன்
நெறியைச்சொல்லுவேன் கேளுங்கடி ௩

முப்பொழுதப்பூசை புரியாண்டி-சிவ
முத்தியைவெண்ணீர் பிரியாண்டி
யெப்போதுஞ்சிந்தை சிவத்தாண்டி-மன்னன்
யேற்போருக்கீயுங் குணத்தாண்டி ௪

என்னவரங்கள்புரிந்தாலும்-பொருள்
யெப்படிவாரி யிறைத்தாலும்
தன்னரசாளவோர் புத்திரனில்லாமல்
தளர்ந்துவேந்த னழுதாண்டி ௫

அரசனழுதக்குறையாலே-சொந்த
அமைச்சநல்ல அறிவாலே
பரங்கள்கேட்ட களிப்பேயென்று நன்றாய்
பரக்கப்பெருங்கொடி நாட்டுமென்றார். ௬

கேட்டப்பொருளைத் தருவனென்றுலெந்த நாட்டுத்தூரவியும் வந்திடுவார், கோட்டிக்கொருபுண்யவானிருந்தாலும் குறைகள்நிறைவேறுமென்றுரைத்தார் எ

மந்திரிசொன்னமொழியாலே அப்போமன்னனும் மெத்தமகிழ்வாலே, இந்தமொழியுமுபதேசந்தானென் றெழுநூரடிக்கம்பம் நட்டாண்டி. அ

கம்பத்தைநட்டு முடித்தாண்டி கொடிகாற்றில்பறக்கத்தொடுத்தாண்டி, அம்புவியிலுள்ளோர் யெப்பொருள் கேட்டாலும்அட்சணமேதாரேனென்றாண்டி. கூ

கட்டடதானங் ஙரிதானம் நல்ல காரிழைதானங்கலைதானம் பட்டுடைதானம்பரிதானம் திருபாக்கியமென்றபொருள்தானம் ௰

கோகுலதானங் குடைதானம்-குடி-யிளைத்தபேருக்குநூதானம் வாகாய்முப்பத்திரண்டு தானங்களும்வல்லாளன்செய்கிறநாளையிலே.

பண்டையுலக முழுமையஞ்சுத்திய பாரசடைமுனி நாரதரும், கண்டேவல்லாளன் பெரும்புகழ்பாவையுங் காதினால்கேட்டுத்தொடர்ந்தாண்டி. ௰௨

எல்லையெல்லாம்புகழ் கொண்டவனே அப்பா வல்லாளனென்கிறமன்னவனே, பல்லாயிரங்கோடி சன்னதிசுத்தினன் பாதையிலுன்புகழ்கேட்டுவந்தேன் ௰௩

வந்தவர்நாரதமாமுனிவேடத்தை வல்லாளராஜனறியாமல், சிந்தையிலென்னபொருள்நினைத்துவந்தீர் சொல்லுமையா பரதேசியென்றார் ௰௪

## நாரதர்சொல்-விருத்தம்.

எண்டிசையரியவேதான் எழில்தர்மக்கொடியைநாட்டி.
அண்டினோர்க்கீவேனென்ற ஆண்மையைப்பகர்ந்தமன்னா
ஒன்றினைக்கருதியேதான் ஒன்பதுகோடிசெம்பொன்
இன்றினைக்கேட்கவந்தே னெனக்களித்தனுப்புவாயே.

## கும்மி

இம்மொழிகாதினில் கேட்டாண்டிமன்னன் யேதும்பதிலுரைசொல்லாண்டி, செம்பொன்னைவாரி யளந்தாண்டி சிவபத்தரடியிற்றொழுதாண்டி. ௰௫

ஒன்பதுகோடி குவித்தனையா இதோ ஒட்டகமீதி லெடுத்தனையா, தம்பதிசெல்லத் துணையும்விட்டேனினி தாருளமாகநடவுமென்றான். ௰௬

மன்னனுரைத்தமொழி கேட்டாரிந்த மண்டலஞ்சுத்துந்தவமுனியார், பன்னுங்கயிலைய மேவுஞ்சிவனுக்குப்பக்திவிஜந்தானென நினைத்தார். ௰௭

கட்டியபொன்னை நடத்திக்கொண்டு முனிகாற்றிலும் வேகமாக வந்து, எட்டியிரண்டடியாகக் கயிலாயம யேகிநின்றாண்டித் தவமுனியும் ௰௮

## கயிலாயத்தில் நாரதர்சொல்லுதல்.

முப்பத்துமுக்கோடி தேவர்களும் முனி நாற்பத்தெண்ணாயிரம்மகாரிஷியும், செப்பமாய்கூடுஞ் சபைதனிலேமுனி சிரசைக்குனிந்து தொழுதாண்டி. ௰௯

திங்களுங்கெங்கை தரித்தவரோ நெற்றிதீயால் புரத்தையெரித்தவரோ, பொங்குமுலகினில் மானிடன்செய்கிற புண்ணியமென்சொல்வேன் சங்கமரோ. ௨௰

அண்டங்களாயிரத்தெட்டிலுமே யுமக்கடியார்கோடானகோடியுண்டு, தொண்டனையாயிந்த வல்லாளனைப்போலே துய்யகுணத்தவருமில்லை. ௨௧

வல்லாளனென்கிற பேருடையான் திருவண்ணாமலை நகருக்குடையான், இல்லாளைக்கேட்டாலுமே தருவானென்றுஞ் சொல்லாத நல்லகுணமுடையான். ௨௨

என்றுமுனிவனுரைத்திடவே மனங்கொண்டு சிவனுந் தனித்திடவே அண்டைநிறைந்துள்ள தேவர்களாதியும் ஐயன்கருணைக்கிசைந்தனரும். ௨௩

## பரமசிவன் குபேரனையேவுதல்.

தொண்டரிருதயங் கண்டவராமிந்த தொல்லுலகெங்கும் நிறைந்தவராம், அண்டரறிந்திடவேணுமென்றே யளகாபுரிவேந்தன்முகப்பார்த்தார். ௨௪

பொன்னுக்குடைய புரந்தரனே அப்பாபூவுலகெங்கும் மதிப்பவனே, தன்னிகரற்ற வென்னன்பன்குறையார தாரினிற்போய்வரவாருமென்றார் ௨௫

ஆயிரத்தெட்டுசிவகணமும் அளகாபுரிவேந்தன் குபேரனுமாய் தோயுங்கருணைக்கடவுள் திருவடிதோத்திரஞ்செய்யத்துடங்கனரும

முக்கண்கடவுளோர் ஜங்கமருமங்கே முந்தியசீடன் குபேரனுமாம்மிக்கசிவகெணமாயிரத்தெட்டும்மெய்யன்திருவடியாண்டிகளாம்.

ஆயிரத்தெட்டுகெணம்நடக்க அதில்ஆதித்தன்போல் பெருமான்நடக்க, கேயகுருவோடு ஆண்டியுஞ்சீடனும் நெருங்கியண்ணாமலை யடுத்தார். ௨௮

அண்ணாமலைக்கு வரும்பாச்சல் அங்கே அரகாரவென்ற பெருங்கூச்சல், எண்ணவோரொண்பதிங்காதவழிதூரம் யெல்லாஞ் சிவபத்தருய் நுழைந்தார். ௨௯

சங்கராவென்று சிலர்துதிப்பார் சிலர்சப்போசதாசிவவென்றுரைப்பார், மங்கையோர்பாகாவெனத்தொழுவார் மதிமாமுடியானேயெனப்பணிவார். ௩௰

எண்பதிங்காதமண்ணாமலைமுற்றிலும் யெல்லாஞ் சிவமயமாய் நிறைந்து, அண்ணலெனுஞ்சிவ சங்கரசங்கமர் ஐயனுரைப்பதைக் கேளுங்கடி. ௩௧

ஆரமணிகள்பணிவேண்டே னிது வல்லதுபூமித்தால் வேண்டாம்கூரியபொன்னும் பொருள்வேண்டேன் அன்னங்கொடுக்கும் உத்தமர் பெங்கேயென்பார். ௩௨

விதிமுழுமையுமேவிடுத்துயிவர் வேசியரில்லமதையடுத்து, பாதிமதியணி யெம்பெருமானந்த பாவையர்முன்னிலை யேதுரைப்பார்.

ஆண்டியடிநாங்கள் ஆண்டியடி கருத்தாண்டு முகலும்மைவேண்டவில்லை, நீண்டசிலைமாரன் தூண்டுகணையாலே நினைவுதோணுது கொஞ்சமடி. ௩௪

கொஞ்சம்நினைவு தடுக்குதடியெங்கள் நெஞ்சமெவ்வாறே நெருக்குதடி, வஞ்சியொருத்திக்கு யின்றிரவுக்கு வழங்குங்கட்டளைசொல்லுமடி. ௩௫

தாசிகள்பொது-விருத்தம்.

வன்னியும்பிறையும்வேணி வளர்சடைமுடியான்சாட்சி
மன்னவருனாத்தவரோ மற்றொருமுகதைப்பாரும்
கன்னியரொருத்திக்கேதான் சட்டளையாயிரம்பொன
தன்னிலுங்குறையோமையா தானடக்கலையின்வாறே.

கன்னியர்சொன்னமொழிகேட்டுக் கடை கண்ணால் குபேரன்முகம்பார்த்து, பொன்னிலே ஒவ்வொருஆயிரமெண்ணியே பேதையர்கையிற்கொடுவுமென்றார். ௩௬

வீடுமுழுதுங்குறித்துக்கொண்டார் அங்கே வேசிக்கோராண்டிநிருத்திவிட்டார், நீடியஞானவிழிநோக்கி வேறேநேரிழை யில்லையென்றேமதித்தார் ௩௭

ஆண்டிக்கி வஞ்சனைசெய்யவேண்டாம் இன்பம்ஆகாமல் நாளைக்கழிக்கவேண்டாம், வேண்டும்பொருளைத் தடுக்கவேண்டாம் பெண்ணே வீணாய்பொழுதை விடிக்கவேண்டாம். ௩௮

ஆரிழைக்கிப்படி சொன்னாண்டி சிவன்ஆண்டிக்கும் ஜாடைகள் பண்ணாண்டி, நேரிழையில்லம்விடுத்தாண்டி சிவனநேராய் சபையையடுத்தாண்டி. ௩௯

ஜங்கமர்நோக்கமதைப்பார்த்து-ராஜன் - சாஷ்டாங்கமாக சிரந்தாழ்த்தி, எங்குவந்தீரையாபத்தர்களேவுமக்கென்னபொருள்வேணும் வுத்தமரோ. ௪௰

பொன்னுக்கிடமில்லை ஆண்டியப்பாநான் போக்கிடய்யாத்திரைபாதையப்பா, கன்னியர்ஆசை நெருக்குதப்பா கெட்டகாமம் வந்தென்னைத்தடுக்குதப்பா. ௪௧

கன்னியரேதுக்கு ஜங்கமரோ யிதோகல்யாணம் செய்விப்பேன் இக்கணமே, வன்னிக்கெதிராகக் கட்டினமாதுவுன் வாழ்நாளைக்கெல்லாமிருப்பாளே. ௪௨

தொல்லையப்பாமிகத் தொல்லையப்பா-அந்த அல்லலப்பாபடச்சள்ளையப்பா, யெல்லையப்பாயெனக் கில்லையப்பாசுகம் யின்றைக்கொருநாளே போதுமப்பா. ௪௩

இன்றைக்கொருநாளே போதுமென்றுயிந்த யேழைப்பண்டா ரமுறைத்திடவே, நன்றென்றுதூதரைத் தானனுப்பி விலைநங்கை யொருத்திபழையுமென்றான். ௪௪

காணுமண்ணுமலைவீதியெல்லா மிந்த காவலரோடி மிகப்பார்த்து, ஆணும்பெண்ணன்றித் தனிந்தவரிலலையே ஆச்சர்யமென்றுப் பணிந்தார்கள். ௪௫

கேட்டதேமன்னனதிவேர்த்து அங்கே கிட்டவேமந்திரிமுகம் பார்த்து, போட்டக்கொடிக்கொரு தீக்குவாராமலே போயிநீவாவெ ன்றுரைத்தாண்டி. ௪௬

அமைச்சனெழுந்து நடந்தாண்டி-விலை - ஆரிழைவீதிநுழைந்தா ண்டி, நிமைகொட்டாமலே வீட்டெல்லாமாண்டிகள் நிறைந்திருப்ப தைகண்டாண்டி. ௪௭

மதனக்கலவித்தொடுப்பவருஞ்சிலர் மாரிசக்கீதம்படிப்பவரும் விதனமில்லாமலே பஞ்சணைமீதினில்விருந்துப்பலகாரந் தின்பவரும்

ஆடைகளைந்துள்ளமாதர்களும்-நன்றாய்-அணியைத் திரித்திப் படிப்பவரும், கூடவப்போதுநினைப்பவரும்-சிலர் குந்தியேபேசியிரு ப்பவரும். ௪௯

அல்லாமமச்சன் அரிந்துக்கொண்டு-கொஞ்சம்- அழைத்துப்பா ர்ப்போமென்றெண்ணிக்கொண்டு, மெல்லியொருத்தியை மன்னனை ழைக்குறார் மெத்தப்பணமுந் தருவாண்டி ௫௰

மெத்தப்பணந்தாரோனென்றுரைத்தீர் இதோபத்தரிடத்தில்மு ன்வாங்கிவிட்டோம், பொய்த்தமொழியென்றுஞ்சொல்லமாட்டோ மையா பொழுதுவிடிந்தாலே வாரோமென்றார். ௫௧

ஆண்டியிடத்திலே வாங்கிவிட்டோம்-பத்து-ஆயிரந் தந்தாலும் நீங்கமாட்டோம், வேண்டிவந்தோரைக் கெடுக்கமாட்டோமினி விடி ந்தபிறகே வருவோமையா. ௫௨

அப்புரங்கேழ்க்கவுமநாவுமில்லை-அவர்க்-கங்கேநிற்கவும்லைப்பவி ல்லை,தெப்பெனவோடியரசன்சபையிலேசேதிவிபரமுறைத்தாண்டி

ஆச்சர்யமென்றுநினைத்தாண்டி-மன்னன்-அங்கேயே மூர்ச்சை யாய்விழுந்தாண்டி, நான்செய்துவந்த தருமமெல்லாமொரு நங்கை யால்கெட்டுதென்றேயழுதார். ௫௪

மன்னவனங்கேயெழுந்தாண்டிகூட-மந்திரிதானுந்துடர்ந்தாண் டி, தன்னுடன்காவலர் யெண்ணற்றபேருமாய் தாசித்தெருவில்வுலா ப்பாண்டி. ௫௫

நங்கையேவுங்களை நம்பிக்கொண்டு-யெந்தன்- நாவினுலுத்தரஞ் சொல்லிவிட்டேன், சங்கரர்தொண்டனோர் ஜங்கமண்டி-யவர்-சாபங் கொடுத்தால் பலிக்குமடி. ௫௬

ஊ நம்பதியும்பினுங்கொடுப்பேனெந்தன் வுயிரைக்கேட்டாலு மேதருவேனென்றான், பாரளித்தசிவன்சாட்சியாகச்சொன்னேன்பா வையொருத்திவாங்களடி. ௫௭

மன்னனுரைத்தமொழிகேட்டு-அந்த-மாசானேவோருந்தெண்
டநிட்டு, முன்னமேஆண்டியிடம் பொருள்வாங்கினோம் மோசமினி
செய்யமாட்டோமையா. ௫௮

இன்றைப்பொழுதவிடிந்துவிட்டால் நாங்கள்யெல்லோரும் நா
ளைவருவோமையா, ஒன்றுமேநீதரவேண்டாமையா பெண்கள் வுங்க
ளுடமையேகாணுமையா. ௫௯

நடக்கக்காலுமிகச்சோர்ந்து-ராசன்-நாணியேவெட்கி முகந்தள
ர்ந்து, ஒடுக்கமாகமனைசேர்ந்து மன்னன்-ஒன்றுஞ்சொல்லாமல் படுத்
தாண்டி ௬௰

மல்லைமாதேவியோமூத்தவளாம் யிளம்மங்கையோ சல்லமாதே
வியராம், மெல்லியிருவரும்மன்னனமுகையில மெத்தவுங்கூடவிசன
மிட்டார். ௬௧

கொட்டவிரதம்விடுத்தனடி-யின்று-கொலையாச்சாபம்பிடித்த
னடி,கட்டக்கொடிமரம்பட்டுதடி-யினி-நானுமிருந்தால்கனைமதாண்டி.
பத்தர்க்குசொன்னமொழிபோச்சு-இனி-பாவிஞ்னென்கிற
பேராச்சு-யித்தனைமீதிலோர் மாதுகிடைக்காமல்என்றடநெஞ்சுரண
மாச்சு. ௬௩

ஆளைமுகத்தயர்பார்த்து-இரண்-டன்னத்திளையகிளிசோர்ந்
து-வேளைக்கிதோஷங்குரிக்கவேண்டாமுந்தன் விரதஞ்செலுத்துவீ
ரென்றுசொன்னாள். ௬௪

ஆண்டியின்ஆசைக்கெடுக்கவேண்டாம்-எனக்-காக்கினை ஒன்று
ம்கொடுக்கவேண்டாம், நீண்டவிரதம் விடுக்கவேண்டா மிப்போ நா
னேயனைகுமோ னென்றுசொன்னாள். ௬௫

சொல்லவுனக்கு பயந்தேண்டி நீ சொன்னது மோட்சநயந்தா
ண்டி நல்லதுசிக்கிரமஸ்தானபானஞ்செய்து நல்லபட்டாடையுடுத்து
மடி. ௬௬

சீக்கிரமென்றுவுரைத்துவிட்டு-மன்னன்-ஜங்கமர்முன்னாக ஓடி
வந்து, காக்கவேணுமையா கன்னியிருக்குறாள் களிதருசேரவேவா
ருமென்றான். ௬௭

பாசம்பணிந்தவர்கைபித்து - மலர்- பஞ்சணைவீட்டுக்கழைத்து
வந்து, ஓதினவாக்குமுடித்தேனையாயினி - உங்கள்மனம்போலேசே
ருமென்றான். ௬௮

சோதிக்கவந்துள்ளசங்கமருமப்போ- சேர்ந்தபஞ்சணைமேல்ப
டுத்து, ஆதிகடவுளும்யோகநித்திரையில் ஆனந்தமாகயிருந்தாண்டி.
சல்லமாதேவியிளையமங்கையவள் ஸ்தானங்கள்செய்து பணிபூ
ட்டி, மெல்லநடந்துமே பஞ்சணைவீட்டிலே மெத்தனைப்பக்கத்தி லு
ட்கார்ந்தாள். ௭௰

வீணைகரத்தின்யிசைபடித்தாள் காம-வேஷக்குரியுந்தொடுத்து
விட்டாள், நாணமில்லாமலேயெப்படி செய்தாலும் நாயகன் நித்திரை
செய்தாண்டி. ௭௧

கங்குல்விடிங்கால் மொழிபோகும் நம்ம கணவன் விரதம் பழுதாகும், இங்ஙனம்சும்மா விருக்கக்கூடாதென்று யெட்டி பிடித்தவர் மேல்படுத்தாள் எஉ

படுத்துமாதுத் தழிவிடவே இவர்பாலகனுகியழுதிடவே, தடித்தகொங்கையில் பால்சுரந்து அப்போ தானுயொழுகுதாம் பாருங்கடி.

பொது விருத்தம்.

குழவியுங்காகாவென்று கூறியேயழுகும்போது
மங்கையதுநிகர்த்தவேந்தன் மனமதுதிடுக்கிட்டோடி
பிழைபதுவரியேன்யீசா பேதமோநினைத்தாயிங்கு
பழகவோவந்தாயென்று பரதவித்தேதுசொல்வான்.

கும்மி.

சங்கரசம்போசதாசிவனே-யிது-சம்மதமோ-யெங்கள் துன்மனமோ, இங்கெனைப்பாவியென்றேவிடுத்தாய்-என்னை - யேதுக்கையா சுமையாகவைத்தாய். எச

ஆதிபராபரமெய்ப்பொருளே யெங்கன்-ஆறுயிருனபரம்பொருளே, சோதிக்கவந்துகுழந்தையானு-யினி செய்யும்வாரேதோ - வரியேனையா. எரு

என்றுதொழுதுப் புலம்புகையிலே அங்கே யிருந்தகுழந்தையும்காணவில்லை, நின்றுப்பரவசமாகையிலே சிவன் நின்றார் ரிஷபத்திச் அண்டையிலே. எசு

நானுநச்சோதனை செய்தேனப்பா யிங்கு நானே குழந்தையாய் நின்றேனப்பா, ஏனேவுனக்குத்துயரமப்பா யினிஎன்னவரம்வேணுங்கேளுமப்பா. எஎ

பிள்ளையில்லாமல் அறம்புரிந்தவென்னை பேதகஞ்செய்ததுயேதுக்கையா, தொல்லுலகந்தனை நீகொடுத்து யிந்த தொண்டனுக்குன்னடி தாருமையா. எஅ

இன்றுமுதல்பிள்ளைநானுச்சே-உனக்-கின்னமுஞ்சிலநாளராசாச்சே ஒன்றுமஞ்சாமல்கிரிகைநடத்திவாவுனக்குமோக்ஷமிருக்குதென்றார்.

இந்தவரமுங் கொடுத்துவிட்டு ஜெகதீசன்கைலைப்பதி தானடந்தார், அந்தநாள்தொட்டு இதுவனைக்குமீசன் அண்ணாமலைக் கொருபிள்ளையடி. அ௰

நீடும்புராணஉரைப்படிக்கேயிந்த நீதியுலகமறியவென்று, பாடிவைத்தான் சிறுமணலூர் முனிசாமி படித்துக்கும்மியடியுங்கடி. அக

கல்வியில்சிறந்தஞானிகட்கும் கவிசொல்லுமுலகிற்புலவருக்கும் அல்லலற்றவடியார்க்கும்அனைவோர்க்கும் வந்தனமையாநேசர்களே.

வல்லாளமகாராஜன் கும்மி

முற்றிற்று.